054

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

# FIRST YEAR EXAMINATION IN ARTS (EXTERNAL) – 2011/2012
HELD IN APRIL / MAY, 2013

# TML 1.11 LITERARY APPRECIATION AND PRESCRIBED TEXTS

நேரம்: 03 மணித்தியாலயம்

(அ) பகுதியில் உள்ள இரு வினாக்களுக்கும் (ஆ), (இ) பகுதிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி – அ

01. i. இலக்கியம் என்றால் என்ன?

ii. அதுபற்றிய அறிஞர்களின் அபிப்பிராயங்கள் யாவை?

iii. அவ்வபிப்பிராயங்களைக் கொண்டு உமது எண்ணத்தினை விமர்சனரீதியாக விபரிக்குக.

02. அ. மேல்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.

i. அன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை
ஆம்பல் நாறுந் தேம்பொதி நறுவிரைத்
தாமரைச் செவ்வாய்த் தண்ணறற் கூந்தல்
பாண்வாய் வண்டு நோ திறம் பாடக்
காண்வரு குவளைக் கண்மலர் விழிப்பப்
புள்வாய் முரசமொடு பொறிமயிர் வாரணத்து
முள்வாய்ச் சங்கம் முறைமுறை யார்ப்ப
உரவுநீர்ப் பரப்பின் ஊர்துயி லெழுப்பி
இரவுத் தலைப்பெயரும் வைகறை காறும்
அரையிருள் யாமத்தும் பகலும் துஞ்சான்
விரைமலர் வாளியொடு கருப்புவில் லேந்தி
மகர வெல்கொடி மைந்தன் திரிதர
நகரங் காவல் நனிசிறந் ததுவென்.

ii. புள்ளிவண் டருட்ட முண்டிசை பயிலும்

பொழிறிகழ் மக்கமா புரத்திற்

றெல்லிய குறைசிக் குலத்தினி லுதித்த

செம்மலுக் குனைந்தபே ராண்டு

விள்ளருங் கணக்கா றாறிரண் டதின்மேல்

மேலவன் றிருவுளப் படியால்

வெள்ளிடை யதறின் சிறிதொளி திரண்டு

விழித்திடும் விழிக்கெதிர் தோன்றும்.

தெரிந்திடு மொளியைத் தம்மிரு விழயாற்

றெரிதர நோக்குவர் காணா

திருந்திடும் பின்னுந் தோற்றிடு மிதனை

யெவரொடும் விடுத்தெடுத் துரையார்

பொருந்துளக் களிப்பு மச்சமும் பிறப்பப்

புந்தியிற் றேர்குவர் பொருவாக்

கருந்தலைக் கவைநா வரவுட றடிந்து

கவின்கர தலகமும் மதுவே.

ஆ. மேல்வரும் கவிதையில் நீர் காணும் நயத்தினைச் சுருக்கமாக விபரிக்குக.

**மீண்டும் தொடங்கும் மிடுக்கு**

மப்பன்றிக் காலமழை காணா மண்ணிலே

சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது.

ஏர்

ஏறாது. காளை இழுக்காது.

எனினும் அந்தப்

பாறை பிளந்து பயன்விளைப்பான்

என் ஊரான்.

ஆழத்து நீருக் ககழ்வான் அவன்.
நாற்று
வாழத்தன் ஆவி வழங்குவான். ஆதலால்
பொங்கி வளர்ந்து பொலிந்துபார்
நன்னெல்லு.

தங்க நகைகள் தலைக்கணிந்த பெண்களே
கூடிக் குனிந்து கும்மி கொட்டுவதும்,
காதினிக்கப்
பாடிக் கவலை பறக்கச் செய்கின்றதும் போல்,
முற்றி, மனிதன் முயற்சிக்கு
இறைகொடுக்கும்

பொற்காசாம் நெல்லுப் பொதி சுமந்து
கூத்தாடும்
அந்தப் பயிரின் அழகை அளந்தெழுத
எந்தச் சொல் உண்டாம் எமக்கு?

அவ்வுழைப்பாளி
உள்ளம் நெகிழ்ந்தான்.
ஒருகதிரைக் கொத்தாகக்
கிள்ளி முகர்ந்தான்
கிறுகிறுத்துப் போகின்றான்.

வாடும் வயலுக்கு வார்க்கா முகில், கதிர்கள்
சூடும் சிறுபயிர்மேல்
'சோ' வென்று நள்ளிரவிற்

கொட்டும், உடன் கூடும்
கொலைக்காற்றும் தானுமாய்
எட்டுத்திசையும் நடுங்க முழங்கி எழும்.
ஆட்டத்து மங்கையர் போல்
அங்குமொய்த்து நின்றபயிர்
பாட்டத்தில் வீழ்ந்தழிந்து பாழாகிப் போய்விடவே
கொள்ளைபோல் வந்து கொடுமை விளைவித்து
வெள்ளம் வயலை விழுங்கிற்று...

பின்னர் அது
வற்றியதும், ஓயா வலக்கரத்தில் மண்வெட்டி
பற்றி, அதோபார், பழையபடி கிண்டுகிறான்,
சேர்த்தவற்றை
முற்றும் சிதறவைக்கும் வானத்தைப்
பார்த்தயர்ந்து நிற்கும் பழக்கமற்றோன்
வாழி, அவன்
ஈண்டு முதலில் இருந்தும் முன்னேறுவதற்கு
மீண்டும் தொடங்கும் மிடுக்கு!

## பகுதி – ஆ

03. 'குகப் படல'த்தில் கோப்பருந்தேவி, குகன், சுமித்திரை முதலானவர்களை அறிமுகப்படுத்தும் பகுதிகளை விபரித்து கம்பனின் படைப்பாற்றலை மதிப்பிடுக.

04. "காதல் இன்பமிக்கது மாத்திரமல்ல துன்பமும் மிக்கது" என்பதை அந்திமாலை சிறப்புச் செய் காதையை ஆதாரமாகக் கொண்டு விபரிக்குக.

## பகுதி – இ

05. பாரதி காணும் விடுதலை உள்ள சமூகத்தை, அவர் கவிதைகளை ஆதாரமாகக் கொண்டு அலசுக.

06. "நமது வாழ்வின் அக, புற முரண்பாடுகளை பெரிதும் சித்திரிப்பனவே புதுமைப்பித்தனின் கதைகள்" அவர் கதைகளை ஆதாரமாகக் கொண்டு இக்கூற்றினைப் பரிசீலிக்குக.

07. "மகாகவியின் கவிதைகள் கலைத்துவமிக்கவை" என்பதனை அவர் கவிதைகளின் அழகியல் நுட்பங்களைக் கொண்டு விபரிக்குக.

08. பாராம்பரிய கிழக்கு முஸ்லிம்களின் வாழ்வியலை சித்திரிக்கின்ற கவிஞர் அப்துல் காதர் லெவ்வையின் 'செய்னம்பு நாச்சியார் மான்மியம்' பற்றி கருத்துரைக்குக.